நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரியகுளம்.
முன்னிலை : திரு.K.கமலநாதன், பி,எஸ்.சி.,பி.எல்.,
நீதித்துறை நடுவர், பெரியகுளம்.
2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் வெள்ளிகிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 3679/2023
CNR No: TNTH0C0049782023

1) தனித்,
த/பெ.முருகன்
2) ஜெகதீஸ்,
த/பெ.பாண்டி ...மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர்
ஜெயமங்கலம் காவல்நிலையம்
குற்ற எண்.274/2023
சட்டப்பிரிவு 147, 148, 294(பி), 323, 324, 355, 506(2) & 4 of TNPHW act
...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றை தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முத்துச்செல்வம், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர் இம்மனுவை பிரிவு 277 கு.வி.மு.ச–வின் கீழ் ஜெயமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.274/2023 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 355, 506(2) & 4 of TNPHW act வழக்கிலிருந்து பிணைகோரி தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு, பதில் மனுவில், வாதியும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். வாதிக்கும் எதிரிகளுக்கு சொத்து சம்மந்தமாக இருந்த முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு, மேற்படி எதிரிகள் வாதியையும், அவரது அம்மாவை கடந்த 31.10.2023 ம் தேதி சுமார் 07.30 மணிக்கு அசிங்க அசிங்கமாக பேசி கீழே தள்ளிவிட்டு காயத்தை ஏற்படுத்தியதாக வாதியானவர் பெரியகுளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கொடுத்த புகாரைப் பெற்று தொடரப்பட்ட வழக்காகும். தற்போது வாதியும் அவரது அம்மாவும் சிகிச்சை முடிந்து வெளியில் உள்ளார்கள். மேலும் இவ்வழக்கின் மற்ற எதிரிகள் தலைமறைவாக இருந்து வருவதால் எதிரிக்கு பிணையம் வழங்கும் பட்சத்தில் எதிரியானவர்கள் வெளியில் வந்தால் மற்ற தலைமறைவு எதிரிகளுடன் சேர்ந்து வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் வெளிமாநிலத்திற்கு தப்பிச் சென்று தலைமறைவாகக்கூடும் என்பதாலும், மேலும் எதிரிக்கு ஜெயமங்கலம் கா.நி கு.எண்.235/23 u/s 294(b), 323, 506(1) IPC & 4 of TNPHW Act வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதால் எதிரிகளுக்கு பினையம் வழங்க கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கிறேன் என்று பதில் மனுவில் கூறியுள்ளார்.

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலித்துப் பார்க்கப்பட்டது. எதிரி 01.11.2023 ம் தேதியிலிருந்து நீதிமன்றக் காவலில் இருந்து வருவதாக கூறியுள்ளதைக் கருத்தில் கொண்டும், புலன் விசாரணை இறுதி கட்டத்தில் இருப்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், மனுதாரரை கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானித்து மனு அனுமதிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) மனுதாரர்கள் தனது சார்பாக தலா இரு ஜாமீன்தாரர்களோடு ரூ.10,000/–க்கு பிணைமுறி எழுதித் தரவேண்டும்.

2) மனுதாரர்கள் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி மறு உத்தரவு வரும் வரை கையொப்பமிட வேண்டும்.

3) மனுதாரர்/எதிரி சாட்சிகளையோ, சாட்சியங்களையோ கலைக்கக்கூடாது எனவும்,

4) பிணைக்காலத்தில் இதுபோன்ற குற்றச்செயலிலும் மனுதாரர் ஈடுப்படக்கூடாது என்றும், வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். அழைப்பாணையில் பேரில் அழைக்கும்போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

(ஒம்) K.கமலநாதன்,

நீதித்துறை நடுவர்,
பெரியகுளம்.